வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 16.4.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இந்திய உற்பத்தி மற்றும் சேவைத் துறையின் மொத்த ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 5.5 சதவிகிதம் அதிகரித்து, 820.93 பில்லியன் டாலராக சாதனை அளவை எட்டி உள்ளது.

மக்கள் சேவைக்கான இந்திய ரயில்வேயின் கடமைப் பற்று, 172 ஆண்டுகளாகத் தொடர்ந்து நீடிப்பதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.

புதுச்சேரியில், பிரதமரின் **மத்ஸ்ய சம்பதா** திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளை மத்திய மீன்வளத் துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் இன்று தொடக்கி வைத்தார்.

நாட்டின் மொத்த மீன் உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில், 95 லட்சம் டன்னில் இருந்து, 184 லட்சம் டன்னாக அதிகரித்து இருப்பதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார்.

ஏற்றுமதி-இறக்குமதி

இந்திய உற்பத்தி மற்றும் சேவைத் துறையின் மொத்த ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 5.5 சதவிகிதம் அதிகரித்து, 820.93 பில்லியன் டாலராக சாதனை அளவை எட்டி உள்ளது. அதற்கு முந்தைய நிதியாண்டில் இது, 778 பில்லியன் டாலராக இருந்தது. கடந்த நிதியாண்டில் மொத்த இறக்குமதியும் 915.19 பில்லியன் டாலராக அதிகரித்து இருப்பதாக மத்திய தொழில்-வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில் தெரிய வந்துள்ளது.

வருமான வரி

புதிய வருமான வரி மசோதா பற்றிய மக்களவைத் தெரிவுக் குழுவின் கூட்டம் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்றது.பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு பைஜயந்த் பாண்டா தலைமையிலான 31 உறுப்பினர் குழுவின் அறிக்கை, நாடாளுமன்ற மழைக் காலக் கூட்டத் தொடரின் முதல் நாளில் சமர்ப்பிக்கப்படும். பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் பாதியில் மக்களவையில் கொண்டு வரப்பட்ட, புதிய வருமானவரி மசோதா பின்னர் தெரிவுக் குழுவின் ஆய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ரயில்வே வைஷ்ணவ்

1853-ஆம் ஆண்டு எப்ரல் 16-ஆம் தேதி இந்தியாவின் முதலாவது ரயில், மகாராஷ்டிர மாநிலம் **போரி பந்தரில்** இருந்து **தானே** வரை இயக்கப்பட்டதன் 172-ஆம் ஆண்டு நிறைவு, இன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்திய ரயில்வேயின் பிறந்த நாளாகவும், நாட்டின் வரலாற்றில் முக்கிய மைல் கல்லாகவும், இந்நாள் திகழ்வதாக, ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறி உள்ளார். 3 எஞ்சின்களால் இழுக்கப்பட்டு, 34 கிலோ மீட்டர் தூரத்தை, 75 நிமிடங்களில் கடந்த இந்த முதலாவது ரயிலில் தொடங்கி, நாட்டு மக்களுக்கு சேவை புரிவதற்கான ரயில்வே துறையின் கடமைப் பற்று, இன்று வரை மாறாமல் நீடிப்பதாக ரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ்-விசாரணை

நேஷனல் ஹெரால்டு வழக்கில் திரு ராகுல்காந்தி, மற்றும் திருமதி சோனியாகாந்திக்கு எதிராக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அமலாக்க பிரிவை மிரட்ட காங்கிரஸ் முயல்வதாக பிஜேபி குற்றம் சாட்டி உள்ளது. அமலாக்கப் பிரிவின் நடவடிக்கை, பழிவாங்கும் அரசியல் என்று கூறி, காங்கிரஸ் கட்சினர் இன்று நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட நிலையில், மூத்த பிஜேபி தலைவர் திரு ரவி சங்கர் பிரசாத், புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அமலாக்கப் பிரிவின் நடவடிக்கை,

வழக்கமான சட்ட நடைமுறை தான் என்றும், கண்டன ஆர்ப்பாட்டங்கள் மூலம் காங்கிரஸ் இதற்கு தடைபோட முயலுவதாகவும் கூறினார்.

இதற்கிடையே, மூத்த காங்கிரஸ் தலைவர் திரு பிரியங்கா வாத்ராவின் கணவர் ராபர்ட் வாத்ரா-வுக்கு சொந்தமான நிறுவனம், அரியானா மாநிலம் குருகிராமில் நிலம் வாங்கியதில், பணச் சலவை நடந்திருப்பதாக கூறப்படும் வழக்கில், அமலாக்கப் பிரிவு அதிகாரிகள், புதுடெல்லியில் இன்று 2-ஆவது நாளாகவும், திரு வாத்ரா-விடம் நேரடி விசாரணை மேற்கொண்டனர்.

*சட்டீஸ்கர்-தீவிரவாதி*

சட்டீஸ்கர் மாநிலம் பஸ்தார் வனப் பகுதியில் நேற்று இரவு பாதுகாப்பு படையினருக்கும், மாவோயிஸ்ட்டுகளுக்கும் நடைபெற்ற மோதலில் 2 மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த இருவரின் தலைக்கு ஏற்கனவே மொத்தம் 13 லட்சம் ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டு இருந்தது. தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்ட இடத்தில் இருந்து, 2 சடலங்களும், ஏகே-47 ரக துப்பாக்கி உட்பட ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சம்பந்தப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு படையினரின் தேடுதல் வேட்டை தொடர்கிறது.

ஜெம்

அரசுத் துறைகள் மற்றும் அலுவலகங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்வதற்கான, மத்திய அரசின் ஜெம் இணைய தளம் மூலம், கடந்த நிதியாண்டில், 1 லட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனி நபர்களுக்கு, மருத்துவ காப்பீடு, விபத்து காப்பீடு மற்றும் ஆயுள் காப்பீட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஜெம் இணைய தளத்தை காப்பீட்டுத் தேவைகளுக்கும் பயன்படுத்திக் கொள்வதில், அரசு அலுவலகங்கள் மற்றும் துறைகளுக்கு உள்ள நம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையிலும், பொதுக் கொள்முதல் பணிகளில் புரட்சிகரமான மாற்று சக்தியாக ஜெம் இணைய தளம் மேம்பட்டு இருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் இந்த சாதனை அமைந்துள்ளதாக, ஜெம் தலைமை செயல் அதிகாரி திரு அஜய் பாடு கூறி

உள்ளார். அரசுத் துறைகள் மற்றும் அலுவலகங்கள், ஜெம் இணையதளம் மூலமாக கடந்த நிதியாண்டில், 10 லட்சம் பேரை வேலைக்கு எடுத்து இருப்பதாகவும், மத்திய தொழில் வணிக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி-மீன்வளம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் நாட்டின் மொத்த மீன் உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில், 95 லட்சம் டன் என்றஅளவில் இருந்து, 184 லட்சம் டன்னாக அதிகரித்து இருப்பதாக மத்திய மீன்வளம், பால்வளம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார். அவர் இன்று புதுச்சேரியில், மீன்வள மேம்பாட்டிற்கான பிரதமரின் **மத்ஸ்ய சம்பதா** திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளை தொடக்கி வைத்தும், மீனவப் பயனாளிகளுக்கு, நிதி உதவிக்கான ஆணைகளை வழங்கியும் உரையாற்றினார். மத்ஸ்ய சம்பதா திட்டத்திற்கு 20 ஆயிரத்து 50 கோடி ரூபாயும், மீன்வள உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்கு 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய், மற்றும், நீலப் புரட்சி திட்டத்திற்கு 3 ஆயிரம் கோடி ரூபாயும், ஒதுக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். கிசான் கடன் அட்டை திட்டத்தின் கீழ் தற்போது மீனவர்கள், 5 லட்சம் ரூபாய் கடன் பெற முடியும் என்றும் அவர் கூறினார். புதுச்சேரியில் 2ஆயிரத்து 300 மீன்பிடி படகுகளில் தொலைதொடர்புக்கான டிரான்ஸ்பாண்டர் கருவிகள் பொருத்தப்படும் என்றும், அவர் தெரிவித்தார். அமைச்சர் மேலும் கூறுகையில் ……………………

**(வாய்ஸ்)**

*புதுச்சேரி-மீன்வளம்*

புதுச்சேரி அரசின் மீன்வளம் மற்றும் மீன்வளத் துறை சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தலைமையேற்றுப் பேசுகையில் புதுச்சேரியில் இன்றைய தினம் தொடக்கி வைக்கப்படும் மத்ஸ்ய சம்பதா திட்டப் பணிகளால், மீன்பிடி தொழில்

நுட்பங்களும், மீனவ சமுகத்தினரின் வாழ்வாதாரமும் மேம்படும் என்றார். வேலை வாய்ப்புகளும் இதனால் அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார். துணை நிலை ஆளுநர் உரையில் இருந்து ஒரு பகுதி.....................................

(வாய்ஸ்)

காமராசர் மணி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி பேசுகையில், தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்களைப் போல, மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் முழு கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்றும் இத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கூறினார். முதலமைச்சர் மேலும் கூறுகையில் ............................

(வாய்ஸ்)

*புதுச்சேரி மீன்வளம்*

சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில மீன்வளத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் மற்றும் இதர அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர்நிலை அதிகாரிகளும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

புதுச்சேரியில் இன்று தொடக்கி வைக்கப்பட்ட **மத்ஸ்ய சம்பதா** திட்டப் பணிகளில், கடலில் 10 இடங்களில் **செயற்கைப் பாறை**களை நிறுவுதல், **நரம்பை**யில், பருவநிலை மாற்றங்களுக்கு ஏற்ற கரையோர கிராமம் நிறுவுதல், **மூர்த்திகுப்பம்-புதுக்குப்ப**த்தில், **துணை மீன்பிடி துறைமுகம்** அமைப்பதற்கான ஆய்வுகள் குறித்து **சென்னை ஐஐடி-உயர்கல்வி நிறுவன**த்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகிய பணிகளும் அடங்கும்.

மத்திய இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் இன்று மாலை காரைக்கால் என்ஐடி உயர்கல்வி நிறுவனத்தில் மீன்வளத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியிலும் கலந்து கொள்கிறார்.

வானிலை

தென்னிந்தியப் பகுதிகளின் மேல், வளிமண்டலத்தின் கீழடுக்கில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதால் இன்றைய தினம், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 22-ஆம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நாளை முதல் வரும் 20-ஆம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில், 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக் கூடும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஐபிஎல்

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு புதுடெல்லியில் நடைபெறும் போட்டியில், டெல்லி-ராஜஸ்தான் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு சண்டிகரில் நடைபெற்ற போட்டியில், பஞ்சாப் அணி, 16 ரன் வித்தியாசத்தில், கொல்கத்தா அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

ஜிப்மர்

அன்னப் பிளவை நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு, அறுவை சிகிச்சைக்கு பிந்தைய உணவு மற்றும் ஊட்டச் சத்து சேவைகளை வழங்குவதில் செவிலியர்களுக்கு பயிற்சி அளிக்கும் முகாம், புதுச்சேரி ஜிப்மரில் அண்மையில் நடைபெற்றது. ஜிப்மர் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை துறையின் ஸ்மைல் டிரெயின் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம்முகாமை ஜிப்மர் மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் ரவிக் குமார் சிட்டோரியா இம்முகாமை தொடக்கி வைத்தார். அறுவை சிகிச்சைக்கு பிந்தைய சேவைகள் மற்றும் ஆலோசனைகளை தொலை தூரப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்ல ஏதுவாக நடமாடும் சேவை வாகனம் ஒன்றை திட்ட நிதி மூலம் வாங்கலாம் என்று ஜிப்மர் இயக்குநர் டாக்டர் விஎஸ் நேகி கூறினார். அன்னப் பிளவை பிரச்சனையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஜிப்மர்

மருத்துவமனையின் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை துறையில் வாரம் தோறும் புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் தனி கிளினிக் நடத்தப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்திய உற்பத்தி மற்றும் சேவைத் துறையின் மொத்த ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 5.5 சதவிகிதம் அதிகரித்து, 820.93 பில்லியன் டாலராக சாதனை அளவை எட்டி உள்ளது.

மக்கள் சேவைக்கான இந்திய ரயில்வேயின் கடமைப் பற்று, 172 ஆண்டுகளாகத் தொடர்ந்து நீடிப்பதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.

புதுச்சேரியில், பிரதமரின் **மத்ஸ்ய சம்பதா** திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளை மத்திய மீன்வளத் துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் இன்று தொடக்கி வைத்தார்.

நாட்டின் மொத்த மீன் உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில், 95 லட்சம் டன்னில் இருந்து, 184 லட்சம் டன்னாக அதிகரித்து இருப்பதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.
Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 16.4.2025/Script/

-----------------------------